# தமிழக அறிவியல் பேரவை
# பத்தாவது கருத்தரங்கம்

மே 21-23, 2010

## ஆய்வுக் கோவை



அறிவே அனைத்து ஆற்றலும்
KNOWLEDGE IS POWER


பதிப்பாசிரியர்கள்

முனைவர் சு. கோபாலகிருட்டிணன்

முனைவர் அரங்க. பாரி

ஜா. இராஜா



**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்**

திருநெல்வேலி 627 012, தமிழ்நாடு

# 21.11. தோள்பட்டை பொருத்து விலகலுக்கு பாரம்பரிய சித்த மருத்துவச் சிகிச்சை - ஓர் ஆய்வு

மருத்துவர் வே. கணபதி
திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் சித்த மருத்துவ அலுவலர், விவேகானந்த கேந்திரம், கன்னியாகுமரி.

சித்த மருத்தவத்தின் தனிப்பெரும் கலை வர்மக்கலையாகும். நோய்களைத் தீர்ப்பதிலும், நோய்வராது உடலைக் காப்பதிலும் யோகக்கலை போன்றே வர்மக்கலையும் அடித்தள மக்களின் மனதில் இன்றளவும் வேரூன்றி உள்ளது. தற்காப்புக் கலைகளுக்கு எல்லாம் மூலமாக வர்மக்கலை. நம் வாழ்க்கை முறையோடு ஒன்றிவிட்ட ஒரு கலை. குடும்ப ரீதியாக; பாரம்பரியமாக, குருகுலமாகத் தொன்றுதொட்டு வரும், வர்ம மருத்தவம் பல்வேறுவிதமான வர்ம மருத்துவ முறைகளை உள்ளடக்கியதாகும். இங்ஙனம் சிறந்து விளங்கும் வர்ம மருத்துவம் தற்காலத்தில் மிகமிகக் குறிப்பிட்டச் சிலரால், பெருவாரியான வர்ம மருத்துவ முறைகள் மறைக்கப்பட்டு பலவும் பின்பற்றப்படாமல், நாளாக நாளாக இக்கலை மிகச் சிதைவுண்டு அழியும் தருவாயில் உள்ளது. வர்மக்கலை பற்றிய நடைமுறைக் கருத்துகளுடன் சிகிச்சை அளிப்பவர் மிகமிகக் குறைவே. மேலும் வர்மக்கலையின் ஒரு பிரிவான எழுப்பு முறிவு பற்றிய மருத்துவ முறைகள் இன்று மிகக்குறைவாக சிதறிக் கிடக்கின்றன.

தோள் பொருத்து விலகலுக்கு சிகிச்சை அளிக்கும் முறையை பல்வேறு வைத்தியர்களின் அனுபவ அறிவுடன் சேரிக்கப்பட்டு விஞ்ஞான மற்றும் நூங்களின் ஒப்புநோக்கு ஆய்வுக்கும் மேற்கொள்ளப்பட்டது. அதிக செலவில்லா எளிய முறையில் உரிய உத்தியுடன் குறுகிய காலத்தில் முழுகுணம் பெறப்படும் பாரம்பரிய இவ்வர்மச் சிகிச்சை முறை நாம் அனைவரும் அறியவேண்டிய ஒன்று. இங்ஙனம் பெறப்பட்ட முடிவுகளை மையமாகக் கொண்டு இவ்வாய்வுக் கட்டுரை வர உள்ளது.

இக்கட்டுரை கீழ்க்காணும் தலைப்புக்களை வெளிப்படுத்துவதாக அமையும்.

1. களப்பணியின்போது பெறப்பட்ட தற்போதுள்ள வர்ம மருத்துவத்தின் நிலை
2. அ. வர்ம மருத்தவரை பற்றி சேகரிக்கம் மாதிரி குறிப்பேடு
   ஆ. வர்ம மருத்துவர்களின் நிலை
   இ. வர்ம நூற்கிளன் நிலை
3. வர்ம புள்ளிகளின் விவரங்கள் - விவாதம்
4. தோள்பொருத்து விலகல் - விளக்கம்
   அ. விலகலின் குறிகுணங்கள் - முக்குற்ற விளக்கம்
   ஆ. விலகலின்போது பாதிக்கப்படும் வர்மங்கள்
   இ. சிகிச்சை அளிக்கப்படும் உத்திகள்
   ஈ. எலும்பு பொருத்து சரி கட்டும் முறை
   உ. பயன்படும் மருந்துகள்
   ஊ. ஒப்புநோக்கு ஆய்வு
   எ. பொருட் செலவு - விவாதம்
5. பாரம்பரிய என்பு விலகல் சிகிச்சையின் தனிச்சிறப்புக்கள்
6. வர்மக் கலையை பரப்ப எதிர்காலத்தில் தேவைப்படும் திட்டங்கள்

ஆகியன நூற்கள் ஆதாரத்துடன் செய்முறை விளக்கமாக விளக்கப்பட உள்ளது.

• • •

# 21.12. சித்த மருத்துவ முறையில் சித்த மருந்துகளைத் தரப்படுத்துதல் - ஓர் ஆய்வு

டாக்டர் வே. கணபதி
திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் சித்த மருத்துவ அலுவலர், விவேகானந்தா கேந்திரம், கன்னியாகுமரி.

ஒவ்வொரு நாளும் பாரம்பரிய சித்த மருந்துகளைத் தரப்படுத்துவதன் அவசியம் பற்றிய குறிப்புக்கள் நாளிதழ்களிலும், அரசு ஆணைக் குறிப்புகளிலுமிருந்தும் வந்த

வண்ணம் உள்ளன. இம்மருந்துகளைத் தரப்படுத்தும் முறை பற்றிய ஆய்வுகளும் கருத்தரங்குகளும், அரசு சார்ந்த மற்றும் தனியார் நிறுவனங்கள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் யாவும் பல்வேறு முறைகளில் மேற்கொண்டு செயல்படுத்தி வருகின்றன.

தரப்படுத்தும் ஆய்வு முறை ஒழுங்குப்படுத்தப்பட வேண்டுமாயின் ஆய்வு வழிமுறைகளுக்கான அடிப்படை ஆதாரக் கருத்துக்கள் சேகரிக்கப்பட்டு நெறிபடுத்திட வேண்டும். நவீன முறைப்படி ஆய்வுக்கான அடிப்படை ஆதாரக் கருத்துக்கள் உலகளாவிய முறையில் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. ஆனால் பாரம்பரிய சித்த மருத்துவத்திற்கான மருந்துகள் தரப்படுத்துதலின் அடிப்படை ஆதாரக் கருத்துக்கள் இன்னும் நெறிப்படுத்தப்படவில்லை. ஏனெனில் பல கருத்துக்கள் வாக்கு அளவில், பல நூல்கள் அளவில், அனுபவ அளவில் உள்ளன. இன்னும் அவைகள் சேகரிக்கப்படவில்லை. மருந்து சரியான, தரமானதாக செய்து முடிக்கப்பட்டு இருக்கிறதா? என்று சித்த மருத்துவ முறையில் ஆய்வுடன் அல்லது ஆதாரத்துடன் கூடிய நூல்களும், அனுபவமும் வெற்றிகரமாக செயல்படுத்த முடியும். சில நூற்களில், சூரணத்திற்கான, குடிநீருக்கான, பற்பத்திற்கு செந்தூரத்திற்கான உள்ளிட்ட பல்வேறு அகமருந்து, புறமருந்து 64 வகைக்கும் இலக்கணங்கள் கூறப்பட்டு இருந்தாலும் நடைமுறையில் தனித்தனி மருந்துகள் தொடர்பான ஆய்வுக்கு அவைள் முழுமை பெறாது உள்ளன. ஒவ்வொரு மருந்து பற்றிய முழுக்கருத்துக்களும் சேகரிக்கப்பட வெண்டும். அம்மருந்து தொடர்பான பலரின் கருத்துக்களும் ஒன்றிணைக்கப்பட வேண்டும். சித்த மருந்துகளை, அதன் முழுமை குறையாது சித்த மருத்துவ ரீதியிலாவது தரப்படுத்த வேண்டும்.

• • •

## 21.13. தமிழ்நாட்டின் மூலிகைப் பயிர்களின் எதிர்காலம்

**1. முனைவர் கே. கண்ணன் 2. எஸ். சரவணன்**
உதவி நூலகர், ஆய்வு மாணவர், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வெலி - 12

நமது நாடு மூலிகைத் தாவரங்களை பாரம்பரியமாகவே வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. உலகளவில் இன்றும் நமது நாடு, மூலிகைப் பயிர்கள் ஏற்றுமதியில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுவருகிறது. மூலிகைத் தாவரங்களில் மக்களின் ஈடுபாடு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தாவர மருந்துகள் மனித உடல் நலத்துக்குப் பாதுகாப்பானவை, மற்றும் எதிர் விளைவுகளை ஏற்படுத்தாது. கடந்த 25 ஆண்டுகளில் மூலிகைப் பயிர்களின் வர்த்தகம் பெருமளவில் அதிகரித்து வந்துள்ளமை இதற்கு உதாரணமாகும்.

• • •

## 21.14. தமிழர் வாழ்வில் சித்த மருத்துவ நெறி

**மா. ஆ. கனிமொழி மற்றும் கோ. சுபாஷ்சந்திரன்**
நஞ்சு மருத்துவத்துறை, அரசினர் சித்தமருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை

கல்தொன்றி மண் தோன்றா காலத்தே
முன்தோன்றிய மூத்த குடியாம்

தமிழர் குடி (இனம்) உலகில் பிற நாடுகளில் மொழி என்னவென்று அறியாத காலத்திலேயே உலக அறிவியலின் உச்சக் கட்டத்தில் இருந்தது.

வானவியலும், பூகோளமும், மருத்துவமும் சிற்பக் கட்டடக்கலை போன்ற பல கலைகளிலும் நாம் சிறந்து விளங்கியுள்ளோம். ஏனென்றால் ஆதிகாலம் முதலே நாம் இயற்கையோடு இயைந்த வாழ்வே நடத்தி வந்துள்ளோம். ஐம்பூதக் கொள்கையாகிய 96 தத்துவங்களோடு நம் வாழ்க்கைமுறை இணைந்தே இருந்துள்ளது. இதனை பண்டைய கால இலக்கியங்களான புறநானூறு, அகநானூறு, ஐங்குறுநூறு போன்றவற்றிலும் காப்பியங்களாகிய சிலப்பதிகாரம், மணிமேகலை, போன்றவற்றிலும் திருக்குறளிலும்,







முனைவர் **இரா.தி.சபாபதிமோகன்**
துணைவேந்தர்



முனைவர் **ச.மாணிக்கம்**
பதிவாளர்



முனைவர் **சு.கோபாலகிருட்டிணன்**
ஒருங்கிணைப்பாளர்



ISBN 938062717-3
9 789380 627175

வெளியீடு
**கலைஞன் பதிப்பகம்**
சென்னை